TORONTO ARTS_COUNCIL

# புதிய குடிவரவாளராகவும் மற்றும் அகதிநிலையிலும் உள்ள கலைஞர்களுக்கான வழிகாட்டல் (MENTORSHIP)

## 2025 திட்ட வழிகாட்டுதல்கள்

***விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: ஏப்ரல் 13, 2026***

---

சமத்துவம் பேணுவதிலும் அனைவரையும் உள்ளடக்குவதிலும் TAC உறுதியாக உள்ளது. ரொறன்ரோவின் கலைஞர்கள் அனைவரிடமிருந்தும் நாம் விண்ணப்பங்களை வரவேற்று, அவர்களை ஊக்குவிக்கிறோம். கறுப்பினக் கலைஞர்கள், பழங்குடிக் கலைஞர்கள், பல்லினக் கலைஞர்கள், அத்துடன், செவிப்புலன் அற்ற, குறைபாடுகள் உள்ள அல்லது மனநலம் பாதிக்கப்பட்ட கலைஞர்கள் மற்றும் 2SLGBTQIAP எனத் தம்மைச் சுயமாக அடையாளம் காணும் கலைஞர்கள், புதிய குடிவரவாளக் கலைஞர்கள் மற்றும்அகதிநிலைக் கலைஞர்கள், இளம் மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்கள் மற்றும் நகர்ப்புற மையத்திற்கு வெளியே பணிபுரியும் கலைஞர்கள் ஆகியோரின் முழு அணுகல் மற்றும் பங்கேற்பை உறுதிசெய்யக் குறிப்பிடத்தக்க சமத்துவ நடவடிக்கைகள் அல்லது இலக்குத் திட்டங்கள் உள்ளன. மேலும் அணுகக்கூடியதாகவும் உள்ளடக்கியதாகவும் TAC ஐ மாற்றுவதற்கு நாம் என்ன செய்கின்றோம் என்பதைப் பற்றி எமது [Equity Framework] இல் மேலும் அறிக.

---

## இந்தத் திட்டம் எதனை ஆதரிக்கின்றது?

புதிய குடிவரவாளராகவும் அகதிநிலையிலும் உள்ள கலைஞர்களுக்கான வழிகாட்டல் திட்டமானது, புதிய குடிவரவாளர் மற்றும் அகதிநிலைக் கலைஞர்களுக்கு அவர்களின் கலைப்பயிற்சியை மேம்படுத்துவதுடன், ரொறன்ரோவில் அவர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் உள்ளடங்கலுக்கு உரிய ஆதரவையும் வழங்குகின்றது. ஒரு புதிய குடிவரவாளரை நாம் பின்வருமாறு வரையறுக்கின்றோம்: கனடாவில் 7 வருடங்களுக்கும் குறைவாக வாழ்ந்து வரும் புலம்பெயர்ந்தோர் அல்லது அகதி; அகதி என்பவர் தனது சொந்த நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு இப்போது கனடாவில் வசிக்கும் ஒரு நபராவார்.

இந்தத் திட்டம் தொழில்முறைக்* கலைஞர்களாகிய தனிப்பட்ட புதிய குடிவரவாளர் மற்றும் அகதிகள் ஆகியோருக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த கலைத்துறையில் பயிற்சி செய்வதற்கு உதவும் (வழிகாட்டும்) நிதியுதவியை வழங்குகின்றது.

இந்த வழிகாட்டல் விண்ணப்பம், இணை-விண்ணப்பதாரராக வழிகாட்டியைச் (mentor) சேர்த்துப் புதிய குடிவரவாளராகிய கலைஞரால் சமர்ப்பிக்கப்படும். விண்ணப்பதாரர் மற்றும் வழிகாட்டி இருவரும் தொழில்முறைக்* கலைஞர்களாக அடையாளம் காணப்பட வேண்டும்.

*ஒரு தொழில்முறைக் கலைஞர் என்பவர்:

- பயிற்றுவித்தல் மற்றும்/அல்லது கலைப்பயிற்சி மூலம் தமது கலைத்திறன்களை வளர்த்துக் கொண்ட ஒருவர்;

- அதே கலைப் பாரம்பரியத்தில் பணிபுரியும் பிற கலைஞர்களால் ஒரு தொழில்முறைக் கலைஞராக அங்கீகரிக்கப்பட்டவர்;
- தமது கலையைத் தற்போது நடைமுறை வழக்கமாகச் செய்பவர்;
- அவரின் பணிக்கான ஊதியம் கோருபவர், மேலும் நிதி ரீதியாகச் சாத்தியமானால் அவரின் கலை நடவடிக்கைகளில் அதிக நேரத்தைச் செலவிடக் கூடியவர்;
- மற்றும் பொது விளக்கக்காட்சி, வெளியீடு மற்றும்/அல்லது தயாரிப்பு ஆகியவற்றைச் செய்த வரலாறு உள்ளவர்

**மொத்த மானியத் தொகை $15,000.**

• $7,500 புதிய குடிவரவாளர் அல்லது அகதிநிலைக் கலைஞருக்கு நேரடியாகக் கொடுக்கப்படுகின்றது

• $7,500 வழிகாட்டிக்கு (mentor) நேரடியாகக் கொடுக்கப்படுகின்றது.

நீங்கள் ஒரு புதிய குடிவரவாளரான அல்லது அகதிநிலைக் கலைஞராக இருந்து, வழிகாட்டியைக் கண்டறிவதற்கு அல்லது மொழிபெயர்ப்புச் சேவைகளை அணுகுவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து மார்ச் 13, 2026க்கு முன்னராக, Liza Mattimore என்ற மூலோபாய முயற்சிகள் திட்ட மேலாளரை 416.392.6802 x231 என்ற எண்ணில் அல்லது liza@torontoartscouncil.org இல் தொடர்பு கொள்ளவும்.

<u>TAC அணுகல் மானியம்</u>

**காது கேளாத கலைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிக் கலைஞர்களை உள்ளடக்கிய திட்டங்கள்** அத்திட்டத்தின் போது கலைஞர்களுக்கு ஏற்படும் அணுகல் செலவுகளுக்கு அதிகபட்சமாக $5,000 வரை வழங்கக்கூடிய, <u>மேலதிகமான</u> ***TAC அணுகல் மானியத்திற்கு*** விண்ணப்பிக்க முடியும்,. அணுகல் செலவுகளில் ASL விளக்கம், ஆடியோ விளக்கம், மூடிய தலைப்பு, தகவல் தொடர்பு உதவியாளர்கள், உதவியாளர் பராமரிப்பு (முதியோருக்கான உதவியாளர்கள் உட்பட), ஆதரவுத் தொழிலாளர்கள் மற்றும் உபகரணங்கள் வாடகை அல்லது கலைஞர்களின் அணுகல் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான பிற ஆதரவுகள் ஆகியவை உள்ளடங்கும். ஆனால் அவை மட்டும் அல்ல.

TAC அணுகல் மானியம், 2026 இல் தொடங்கி, மானியம் பெறுபவர்கள் தங்கள் திட்டத்தின் போது எந்த நேரத்திலும் அணுகல் மானியத்திற்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதிக்கும். இந்த அணுகல் மானியம், 2026 முதல் மானியம் பெறுபவர்களுக்கு ஒரு தனி விண்ணப்பத்தின் மூலமாகக் கிடைக்கும்.

## இத்திட்டம் எப்போது செயற்படக்கூடும்

வழிகாட்டல்கள் (Mentorships) ஜூலை 1, 2026க்கு முன்னர் தொடங்கப்படாமல் போகலாம். வழிகாட்டல் நடவடிக்கைகள் அனைத்தும் ஜூன் 30, 2027க்குள் முடிக்கப்பட வேண்டும்.

## புதிய குடிவரவாளர் மற்றும்/அல்லது அகதிநிலைக் கலைஞராக யார் விண்ணப்பிக்க முடியும்?

- எந்தவொரு கலைப் பாரம்பரியத்திலும் பணிபுரியும தொழில்முறைக் கலைஞர்கள் (மேலே உள்ள வரையறையைப் பார்க்கவும்)

- பரந்த கலைச் சமூகத்தில் உள்ள முறைசார் தடைகள் காரணமாக (உதாரணமாக. சமபங்கு தேடும் சமூகங்களைச் சேர்ந்த கலைஞர்களுக்குக் கிட்டும் மட்டுப்படுத்தப்பட்ட முக்கிய விளக்கக்காட்சி வாய்ப்புகள்) சாத்தியமான சமமான தொழில் அனுபவம் மற்றும் சூழல்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்குத் தகுதிகாண் அளவுகோல்களை விளக்குவதில் சில நெகிழ்வுத்தன்மை தேவைப்படலாம் என்பதனை TAC அங்கீகரிக்கின்றது. சமபங்கு தேடும் சமூகங்களைச்சேர்ந்த சாத்தியமான விண்ணப்பதாரர்கள், விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகத், திட்ட மேலாளரிடம் தங்கள் தகுதியைப் பற்றிக் கலந்துரையாட ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- விண்ணப்பதாரர்கள் ரொறன்ரோ நகரத்தில் <u>வசிப்பவர்களாக</u> இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் ஜனவரி 1, 2019க்குப் <u>பின்னர்</u> கனடாவுக்கு வந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் செல்லுபடியாகக்கூடிய பணிஅனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டும் மற்றும் அவர்களின் வழிகாட்டல் காலத்திற்குக் கனடாவில் பணிபுரிய சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் SIN (சமூகக் காப்புறுதி எண்) வைத்திருக்க வேண்டும்
- இந்த மானியத் திட்டத்தை முன்பு பெற்றவர்கள் மறுபடி விண்ணப்பிக்க முடியாது.
- இளங்கலை அல்லது பட்டதாரிப் படிப்பைத் தொடரும் தொழில்முறைக் கலைஞர்கள் தங்கள் படிப்புத் திட்டத்துடன் தொடர்புடைய பணிக்கு விண்ணப்பிக்க முடியாது.

## <u>வழிகாட்டியாக (Mentor) இருப்பதற்கு யார் விண்ணப்பிக்கலாம்?</u>

- எந்தவொரு கலைப் பாரம்பரியத்திலும் பணிபுரியும் தொழில்முறைக் கலைஞர்கள் (மேலே உள்ள வரையறையைப் பார்க்கவும்)
- எந்தவொரு கலைப் பாரம்பரியத்திலும் பணிபுரியும் கலை மேலாளர்கள், கலைக் காப்பாளர்கள் (curators) மற்றும் தயாரிப்பாளர்கள் உட்படத் தொழில்முறைக் கலைப் பணியாளர்கள்
- விண்ணப்பதாரர்கள் ரொறன்ரோ நகரத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும், காலக்கெடுவுக்கு முன்னதாகக் குறைந்தபட்சம் 1 வருடம் ரொறன்ரோவில் வசிப்பவராக இருக்க வேண்டும் மற்றும் அந்த வருடத்தில் குறைந்தது 8 மாதங்களாவது ரொறன்ரோவில் வசித்து வேலை செய்திருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் செல்லுபடியாகக்கூடிய பணிஅனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டும் மற்றும் அவர்களின் வழிகாட்டல் காலத்திற்குக் கனடாவில் பணிபுரிய சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் SIN (சமூகக் காப்புறுதி எண்) வைத்திருக்க வேண்டும்
- இளங்கலை அல்லது பட்டதாரிப் படிப்பைத் தொடரும் தொழில்முறைக் கலைஞர்கள் தங்கள் படிப்புத் திட்டத்துடன் தொடர்புடைய பணிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- வழிகாட்டிகள், புதிய குடிவரவாளராகவும் அகதிநிலையிலும் உள்ள கலைஞர்களுக்கான வழிகாட்டல் உதவித்தொகைக்காக, ஒரு வருடத்தில் ஒரு தடவை மட்டுமே இணை விண்ணப்பதாரராகப் பட்டியலிடப்படலாம்.

## நான் விண்ணப்பிப்பது எப்படி?

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முன் மூலோபாய முயற்சிகள் திட்ட மேலாளர் Liza Mattimore உடன் பேச ஊக்குவிக்கப்படுகின்றார்கள். உங்கள் விண்ணப்பத் தீர்மானத்தைப் பற்றிக் கதைப்பதற்கான ஒரு சந்திப்பைத் திட்டமிடத் தயவுசெய்து 416.392.6802 x231 என்ற எண்ணில் அல்லது liza@torontoartscouncil.org இல் Lizaவைத் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பதாரர் (புதிய குடிவரவாளர் மற்றும்/அல்லது அகதிநிலைக் கலைஞர்) இணை விண்ணப்பதாரர் (வழிகாட்டி) ஆகிய இருவரும் TAC Grants Online https://tac.smartsimple.ca இல் தனிப்பட்ட விண்ணப்பதாரராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். எந்தவொரு விண்ணப்பதாரரும் ஏற்கனவே நிறுவனமாக அல்லது கூட்டுத் தொடர்பாகப் பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தக்கூடாது.

விண்ணப்பதாரர்கள் TAC Grants Online இல் (https://tac.smartsimple.ca) பதிவு செய்து விண்ணப்பத்தைக் கடைசித் திகதியின் இரவு 11:59 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். வேறு எந்த விநியோக முறையிலும் விண்ணப்பங்களை TAC ஏற்காது. உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும் உறுதிப்படுத்தல் மின்னஞ்சலைப் பெறுவீர்கள். உங்கள் in-box இல் அது வரவில்லை என்றால் உங்கள் spam/junk கோப்புறையைச் சோதித்துப் பார்க்கவும்.

## செவிப்புலன் அற்றோர் அல்லது குறைபாடுகள் உள்ளவர்களுக்கான விண்ணப்ப அணுகல் ஆதரவு

அவர்களின் மானிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய ஆதரவு தேவைப்படும் செவிப்புலன் அற்ற அல்லது குறைபாடுகள் உள்ள விண்ணப்பதாரர்கள், விண்ணப்ப ஆதரவு சேவை வழங்குநர்களிடமிருந்து உதவிக்கான செலவுகளை ஈடுகட்டுவதற்காக நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் தகுதியான விண்ணப்பதாரருக்கு $500 வரைக் கிடைக்கும். தகுதியைத் தீர்மானிக்கவும், விண்ணப்ப ஆதரவு நிதியைக் கோரவும் மற்றும் உங்கள் சேவை வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய தொகையின் செயன்முறையை மதிப்பாய்வு செய்யவும், மானியத் திட்டக் காலக்கெடுவுக்குக் குறைந்தது ஆறு வாரங்களுக்கு முன் உங்கள் மானியத் திட்ட மேலாளரைத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப ஆதரவுக்கான கோரிக்கைகளுக்கு மானியத் திட்ட மேலாளரிடமிருந்து அனுமதி தேவை.

## நான் தயார் செய்ய வேண்டியது என்ன?

மானிய விண்ணப்பத்தின் மூன்று முக்கிய பகுதிகள்: *வழிகாட்டல் விவரங்கள், சுயவிவரப் பட்டியல்/CVகள் மற்றும் ஆதாரச் சாதனங்கள்.*

- தயவுசெய்து வழிகாட்டி விவரங்களில் சேர்க்கப்பட்டுள்ள கேள்விகளுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பைப் பார்க்கவும்
- விண்ணப்பதாரர் (புதிய குடிவரவாளர் மற்றும்/அல்லது அகதிநிலைக் கலைஞர்) இணை விண்ணப்பதாரர் (வழிகாட்டி) ஆகிய இருவருக்கும் அவர்களின் கலைப்பயிற்சியை விவரிக்கத் தேவையான *சுயவிவரப் பட்டியல்/CVகள்.*
- *ஆதாரச் சாதனங்கள்* விண்ணப்பத்தின் முக்கிய பகுதியாகும். விண்ணப்பதாரர்கள் வழிகாட்டலுடன் தொடர்புடைய அவர்களின் சமீபத்திய கலைப் படைப்புகளிலிருந்து உதாரணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தது ஒரு

உதாரணமாவது கடந்த 2 வருடங்களுக்குள் இருக்க வேண்டும். வழிகாட்டிகள் ஆதாரச் சாதனங்களை வழங்குவது அவர்களின் தெரிவாகும், ஆனால் அது பெருமளவில் ஊக்குவிக்கப்படுகின்றது.

- வீடியோ/ஆடியோ: ஒரு இணைப்பை (இணையதளம், Vimeo, YouTube) மற்றும் தேவைப்பட்டால், கடவுச்சொல்லை வழங்கவும். வீடியோ/ஆடியோ கோப்புகளின் நேரம் 3 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
- புகைப்படங்கள்: உங்கள் புகைப்படங்கள் பதிவேற்றப்பட்ட இணையதளத்தின் இணைப்பு மற்றும் தேவைப்பட்டால், கடவுச்சொல்லை வழங்கவும். உங்கள் பணியின் JPEG படங்களையும் நீங்கள் பதிவேற்றலாம். ஒரு ஆதாரச் சாதனப் பிரிவில் 5 படங்கள் வீதம் அதிகபட்சம் 15 படங்கள் அனுமதிக்கப்படும்.
- எழுத்துரு மாதிரி: இரட்டை இடைவெளியுடன் அதிகபட்சம் 15 பக்கங்கள் கொண்ட PDF கோப்பு ஒன்றைப் பதிவேற்றவும்

- மானிய மதிப்பாய்வுக் குழு, பொதுவாக ஒரு விண்ணப்பத்தின் ஆதாரச் சாதனங்களைப் பார்ப்பதற்கு 5 நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவான நேரத்தையே செலவிடும். எனவே, படைப்புகளை முழுமையாகப் பார்க்க முடியாதிருக்கலாம். கோப்பு அளவுகள் 200 MBஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.
- Google Drive அல்லது Dropbox மூலம் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம். நீங்கள் Facebook அல்லது Instagram இலுள்ள சுயவிவரங்களைச் சமர்ப்பிக்கும்போது, அவை பொதுக் கணக்குகளாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.

## <u>எனது விண்ணப்பம் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது?</u>

- விண்ணப்பங்கள் சக கலைஞர்களின் மதிப்பாய்வுச் செயன்முறை மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றன: பயிற்சிக் கலைஞர்கள் மற்றும் கலை நிபுணர்களின் மதிப்பாய்வுக் குழு ஒன்று, நிதியுதவிக்கு எந்தெந்த விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்படும் என்பதைத் தீர்மானிக்கின்றது. நிதியுதவிக்கான பரிந்துரைகள் TAC இயக்குநர்களால் அங்கீகரிக்கப்படுகின்றன.
- சக மதிப்பீட்டாளர்கள் யாவரும், ரொறன்ரோ கலைத் துறையுடன் உள்ள அவர்களின் நேரடி அனுபவம், அறிவு மற்றும் TAC இனால் அடையாளம் காணப்பட்ட சமபங்கு முன்னுரிமைக் குழுக்களிடமிருந்து நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதன் காரணமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- விண்ணப்பங்கள் ஒப்பீட்டுச் சூழலில் மதிப்பிடப்படுகின்றன மற்றும் நிதியுதவி குறித்த முடிவுகள் யாவும், கிடைக்கக்கூடிய நிதி, திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் பின்வரும் மதிப்பீட்டு அளவுகோல்களின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன:
- விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கலைத் தகுதி (தரம்) என்ன?
- விண்ணப்பதாரரின் குறிக்கப்பட்ட இலக்குகளை இந்த வழிகாட்டல் ஆதரிக்குமா மற்றும் ஒரு புதிய கலைஞராக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமா?
- இந்த வழிகாட்டல் விண்ணப்பதாரர்களுக்கு அர்த்தமுள்ள ஒரு அனுபவத்தை அளிக்குமா?
- வழிகாட்டிக்கு (mentor) இந்த வழிகாட்டுதலுக்கான பொருத்தமான அனுபவம் மற்றும் தகுதிகள் உள்ளதா?

- வழிகாட்டி வழிகாட்டுதலின் குறிக்கோள்களைப் புரிந்துகொண்டு ஆதரிக்கிறாரா மற்றும் புதிய கலைஞரின் சார்பாக அவர்களின் வலையமைப்பைப் பயன்படுத்துவதற்கான உற்சாகத்தை வெளிப்படுத்துகிறாரா?
- இந்த வழிகாட்டல் பணித் திட்டம் யதார்த்தமானதா?
- மானிய மதிப்பாய்வுக் குழு ஒவ்வொரு விண்ணப்பதாரரின் சுய-வரையறுக்கப்பட்ட கலை இலக்குகள், புவியியல் மற்றும் கலைச் சூழல், கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் கலை வளர்ச்சியின் நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும்.
- **நிகழ்ச்சியின் முன்னுரிமை அளவுகோல்கள்:** புதிய குடிவரவாளர் மற்றும்/அல்லது அகதிகளாக இருப்பதன் விளைவாக ரொறன்ரோவில் தங்கள் கலைப் பயிற்சியின் வளர்ச்சிக்குத் தடைகளை எதிர்கொள்ளும் கலைஞர்களுக்கு இந்தத் திட்டம் முன்னுரிமை வழங்கும்.
- TAC இன் Equity Framework இல் சேர்க்கப்பட்டுள்ள சமபங்கு முன்னுரிமைக் கொள்கை குறிப்பிடுவதாவது, ஒரு தீர்ப்புச் சுற்றில் நன்கு மதிப்பிடப்பட்ட சமதகுதியுடைய பல விண்ணப்பங்கள் இருந்து, தகுதியுள்ள அனைத்து வேட்பாளர்களையும் ஆதரிக்க மானிய வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதி இல்லாத பட்சத்தில், விண்ணப்பதாரர்களால் முன்மொழியப்படும் விண்ணப்பங்களில், ரொறன்ரோ கலைத்துறை ஆலோசனைக் குழுவின் (Toronto Arts Council) சமபங்கு முன்னுரிமைக் குழுக்களில் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்படுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- மானிய மதிப்பாய்வுக் குழுவின் முடிவுகளே இறுதியானவை.

## விண்ணப்ப முடிவுகளை எவ்வாறு கண்டறிவது?

முடிவுகள் கிடைக்கும்போது TAC உங்களுக்கு மின்னஞ்சலை அனுப்பும் மற்றும் TAC Grants Online இல் உள்நுழைந்து முடிவுகளைப் பெற முடியும். காலக்கெடுவின் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் இந்த அறிவிப்பு கிடைக்கப்பெறும்.

## எனது திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டால் என்ன செய்வது?

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே நிதியுதவி பயன்படுத்தப்பட வேண்டும். கலைப்பணித் திட்டத்தில் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் உடனடியாக TAC க்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## திட்டத்தை முடித்தவுடன் நான் என்ன செய்ய வேண்டும்?

பெறுநர்கள் தங்கள் திட்டத்தின் இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். இறுதி அறிக்கை நிரப்பப்பட்டு TAC இன் கிராண்டிங் போர்டல் மூலம் இணையத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இறுதி அறிக்கைக்கான காலக்கெடு மானிய அறிவிப்புக் கடிதத்தில் சேர்க்கப்படும். முந்தைய நிதியுதவி பற்றிய அறிக்கைகள் TAC ஆல் பெறப்பட்டு அங்கீகரிக்கப்பட்டாலன்றி TAC மூலோபாயத் திட்டங்களுக்கான எதிர்கால விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*விதிவிலக்குகளில் TAC Leaders Lab,, Newcomer & Refugee Artist Mentorship மற்றும் TAC-CS Digital Solutions Incubator ஆகிய திட்டங்கள் உள்ளடங்கும். இந்த விதிவிலக்குகள் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் TAC திட்ட மேலாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## இந்த நிதியுதவிக்கான விதிகள் அல்லது தேவைகள் என்ன?

- வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் புரிந்துணர்வுக் கடிதத்தைப் பெறுவார்கள். புரிந்துணர்வுக் கடிதம் நிதியுதவிக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரிக்கும். நிதியுதவியைத் தருவதற்கு முன் புரிந்துணர்வுக் கடிதம் கையொப்பமிட்டு *TAC Grants Online* இல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மானியத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டிய சூழ்நிலைகளையும் இந்தப் புரிந்துணர்வுக் கடிதம் விவரிக்கின்றது.
- இந்த மானியம் பெறுபவர்கள், நிதியுதவி அளிக்கப்படும் நடவடிக்கைகளில், Toronto Arts Council இன் ஆதரவைக் குறிக்கும் எழுத்துபூர்வமான ஆவணங்கள் அனைத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த TAC சின்னம் (logo) எங்கள் இணையத்தளத்தில் உள்ளது; சின்னத்தின் அளவு மற்றும் இடத்திற்கான விவரக்குறிப்புகள் இதே போன்ற நிதியுதவியை வழங்கி வரும் பிற நன்கொடையாளர்கள் அல்லது அனுசரணையாளர்களுடன் ஒத்துப்போக வேண்டும். சின்னத்துக்குப் பதிலாக, "produced with the support of the City of Toronto through Toronto Arts Council" என்ற சொற்றொடரைப் பெறுநர் பயன்படுத்தலாம்.
- Toronto Arts Council மின்னணுவியல் கொடுப்பனவுகளுக்கு மாறியுள்ளது. உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், உங்கள் அறிவிப்புக் கடிதத்தில் விண்ணப்பதாரர் பெயருடன் தொடர்புடைய மானியம் பெறுபவரின் வங்கிக் கணக்குத் தகவலை உள்ளிட வேண்டும். உங்கள் புரிந்துணர்வுக் கடிதம் மற்றும் பிற அறிவிப்புக் கடிதத் தேவைகளுடன் வங்கித் தகவல் சமர்ப்பிக்கப்படும்.
- ரொறன்ரோ நகரத்திலிருந்து மானியத்தைப் பெறுவதற்கான நிபந்தனையாக அனைத்து நிறுவனங்களும் தனிநபர்களும் பாகுபாடு காட்டாத கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ரொறன்ரோ நகரம் கோருகின்றது. அனைத்து வெற்றிகரமான விண்ணப்பதாரர்களும் துன்புறுத்தல்/பாகுபாடு எதிர்ப்புச் சட்டம் மற்றும் நகரக் கொள்கையுடன் இணங்குவதற்கான கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- மானியம் பெறுபவர்கள், Toronto Arts Council இலிருந்து நிதி பெறுவது குறித்துப் போதுமான கணக்குப் பதிவுகளைப் பராமரிக்க வேண்டும். தனிப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு TAC ஆல் T4A படிவம் வழங்கப்படும் அது வருமான வரி நோக்கங்களுக்காகத் தக்கவைக்கப்பட வேண்டும்.
- நிதியுதவியின் மேற்கூறிய பொதுவான நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, மானியத்தின் கொடுப்பனவில் ஏனைய நிபந்தனைகளை வைக்க TAC க்கு உரிமை உள்ளது. (அதாவது நிகழ்ச்சி நடக்கும் இடம், நிரலாக்கம், பிற நிதி ஆதாரங்களை உறுதிப்படுத்தல் போன்றவை). எந்தவொரு குறிப்பிட்ட நிபந்தனைகளும் இந்தப் புரிந்துணர்வுக் கடிதத்தில் இருக்கும்.

## மேலதிகக் கேள்விகள்

திட்ட மேலாளரைத் தொடர்பு கொள்ளவும்


Liza Mattimore

416-392-6802 extension 231

liza@torontoartscouncil.org


**நீங்கள் ஒரு புதிய குடிவரவாளர் அல்லது அகதிநிலைக் கலைஞராக இருந்தால், வழிகாட்டியைக் கண்டறிய அல்லது மொழிபெயர்ப்புச் சேவைகளை அணுக**

**உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து மார்ச் 13, 2026க்கு முன்னராக, Liza Mattimore ஐத் தொடர்பு கொள்ளவும்.**

## <u>பின்னிணைப்பு</u>

விண்ணப்பப் படிவத்தில் உள்ள வழிகாட்டல் (Mentorship) விவரங்கள் பற்றிய கேள்விகள்:

- கலைஞரின் அறிக்கை: நீங்கள் உருவாக்கும் கலை மற்றும் அதை ஏன் உருவாக்குகிறீர்கள் என்பது உட்பட உங்கள் கலைச் சேவையை விவரிக்கவும். உங்கள் சொந்த நாட்டிலும் கனடாவிலும் கலையை உருவாக்குவதற்குரிய உங்கள் அனுபவம் குறித்த விவரங்களைச் சேர்க்கவும்.
- குறிக்கோள்கள்: ரொறன்ரோவிற்கு வந்ததிலிருந்து உங்கள் கலை வளர்ச்சி தொடர்பான உங்கள் அனுபவங்களை விவரிக்கவும். உங்கள் வழிகாட்டலில் நீங்கள் என்ன ஆராய விரும்புகிறீர்கள்? இந்த வழிகாட்டல் உங்கள் இலக்குகளை அடையவும் ஒரு கலைஞராக வளரவும் எவ்வாறு உதவும்? இந்த வழிகாட்டியுடன் நீங்கள் ஏன் பணியாற்ற விரும்புகிறீர்கள்?
- வழிகாட்டியின் (mentor) அறிக்கை: இந்தக் கலைஞருக்கு நீங்கள் ஏன் வழிகாட்ட விரும்புகிறீர்கள்? அவர்களின் கலைப் பயிற்சியில் உங்களுக்குள்ள ஆர்வம் என்ன? வழிகாட்டலுக்கு நீங்கள் கொண்டு வரும் அனுபவத்தைப் பற்றிய குறிப்புடன், இந்தக் கலைஞருக்கு நீங்கள் ஏன் பொருத்தமான வழிகாட்டியாக இருக்கிறீர்கள் என்பதையும் விளக்கவும்.
- பணித் திட்டம்: நீங்கள் எவ்வாறு ஒன்றாக வேலை செய்வீர்கள் என்பதை விரிவான அட்டவணை மற்றும் வழிகாட்டி நடவடிக்கைகளின் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி விவரிக்கவும். திகதிகள், நிகழ்வுகளின் இடம் மற்றும் செயற்பாட்டு விவரங்கள் போன்ற தகவல்களைச் சேர்க்கவும்.
- பிரதிபலிப்பு: உங்கள் கலை வளர்ச்சியில் உங்களுக்கு ஆதரவளிக்கவும் ரொறன்ரோவுடன் உங்கள் ஒருங்கிணைப்பை ஆதரிக்கவும் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதைக் கருத்திற் கொண்டு, நீங்கள் என்ன முடிவுகளை எதிர்பார்க்கிறீர்கள்? இந்த வழிகாட்டலின் விளைவாக உங்கள் வாழ்க்கையில் வித்தியாசமாக இருக்கப் போவது என்ன? வெற்றிகரமான வழிகாட்டல் அனுபவத்தை நீங்கள் எப்படி வரையறுப்பீர்கள்?